# 2020–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ஆம் தேதி (29.04.2020) புதன் கிழமை காலை 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் காந்திஜி சாலையில் காளைமாட்டு சிலை அருகில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியை ஈரோடு ஸ்மார்ட் திட்டத்தின் கீழ் ரூ.14.94 கோடி மதிப்பில் மேற்கொள்ள ந.க.எண். TUFIDCO/SCM-Erode/1096/AM(M)/2018, நாள்: 10.12.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணயைர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19884/2018/IHSDP-3 நாள்.19.12.2019 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மேலும் மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32453/2019/DO2, நாள்: 07.01.2020-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering மற்றும் மூடி முத்திரையிட்ட முறையில் இரு உறை அமைப்பில் 26.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறுஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s. Kousic & co
2. M/s. Sri Balaji Associates

வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை வழங்கியுள்ளார்கள். மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் 13.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்ததாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 16.03.2020-அன்று மதியம் 3.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. Kousic & co | (+) 4.94 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/s.Sri Balaji Associates | (+) 7.48 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.94 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s. Kousic & co நிறுவனத்தினர் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக முதலாம் அறிவிப்பு கடிதம் எண் இ1/7480/2019 நாள்.16.03.2020 அன்று கொடுக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் மேலும் விலையை குறைத்து வழங்க இயலாது என 17.03.2020 அன்று கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார். எனவே ஒப்பந்த நிறுவனத்திற்கு இரண்டாம் அறிவிப்பு கடிதம் எண் இ1/7480/2019 நாள்18.03.2020-ன்படி கேட்க கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தாரோடு டெண்டர் குழுவினரால் பேச்சுவார்த்தை செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் 19.03.2020 தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக இவ்வேலைக்கு மேலும் விலையை குறைத்து வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.94%** சதவீதத்தில் கோரியுள்ள M/s. Kousic & co நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்படி ஸ்மார்ட் சிட்டி திட்டப்பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட **(+) 4.94** % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி, மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, M/s. Kousic & co நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண் : E1/7480/2019

**1. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை தொடர்பாக, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனை கடைப்பிடிக்காதவர்களுக்கு அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும் ரசீதுகள் அச்சடிக்க உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய தி சர்க்கிள், கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. விபரம் பின்வருமாறு:

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | பொது இடங்களில் அசுத்தம் செய்வதற்கான (சிறுநீர்/மலம் கழித்தல்) அபராதம் வசூலிப்பதற்கான ரசீதுகள் | 10000 எண்ணிக்கை (100 எண்ணிக்கை கொண்ட 100 புத்தகங்கள்) | 22500.00 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள்-2016 (8) (9) மற்றும் 10-ன்படி அபராதம் வசூலிப்பதற்கான ரசீதுகள் | 10000 எண்ணிக்கை (100 எண்ணிக்கை கொண்ட 100 புத்தகங்கள்) | 45000.00 |
| 3. | பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் - 2016 அபராதம் வசூலிப்பதற்கான ரசீதுகள் | 10000 எண்ணிக்கை (100 எண்ணிக்கை கொண்ட 100 புத்தகங்கள்) | 45000.00 |
| | | | 1,12,500.00 |

பணி மேற்கொள்ளப்பட்டுள்ள விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(பி3/2414/2019)

2. பதிவு செய்யப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை, உறுதித் தன்மை தொகைகள் ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்கிய பின் நிலுவையாக உள்ள தொகைகளை வருடவாரியாக பட்டியலிட்டு வருவாய்நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய நிதிகளின் கீழ் 31.03.2017 அன்று காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டது.

கீழ்க் கண்டவாறு வைப்புத் தொகைகள் திரும்ப வழங்கப்பட்டமைக்கு ஆட்சேபணை எழுப்பப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | பத்திஎண்/ வருடம் | | நிதி | கணக்கு தலைப்பு எண் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | 15-16/182 | தணிக்கை அறிக்கை | வருவாய் நிதி | 4016 | 408665.00 |
| | ” | ” | ” | 4018 | 177988.00 |
| | ” | ” | ” | 4020 | 995023.00 |
| 2 | 15-16/55 | தணிக்கை குறிப்பு | குடிநீர் நிதி | 4016 | 181798.00 |
| 3. | 16-17/28 | தணிக்கை குறிப்பு | குடிநீர் நிதி | 4016 | 165036.00 |
| 4. | 17-18/52 மண்டலம்-3 | தணிக்கை குறிப்பு | வருவாய் நிதி | 4016 | 5000.00 |

மேற்கண்ட தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகளில் குறிப்பிட்டுள்ள பட்டியல்களின் கூடுதல் தொகைகள் வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட தொகைகள் வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட வைப்புத் தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

கோப்பு எண். பி3/3421/2017

3. அ.கு அனுமதிக்கப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பை கிடங்கில் சீர் மிகு நகரம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள Bio mining பணிக்கு தேவையான மின்சாரத்திற்கு 460 KVA மின்பளுவுடன் உயர் அழுத்த மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்வாரியத்திடம் விண்ணப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட மின் இணைப்பு வழங்குவதற்கான சாத்தியக்கூறினை த.நா.மின் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு மின் வாரியத்தால் செலுத்த கோரப்பட்ட உயர் அழுத்த மின் இணைப்பிற்கான விண்ணப்ப பதிவு கட்டணம் மற்றும் முன் வைப்பு தொகை சேர்த்து மொத்தம் ரூ.3,69,180/- தொகை செலுத்தப்பட்டது. தற்போது த.நா.மின் வாரிய 16.04.2020 தேதிய கடிதத்தில் மேற்கண்ட உயர் அழுத்த மின் இணைப்பு வழங்குவதற்கு அபிவிருத்தி கட்டணம், மீட்டர் எச்சரிக்கை கட்டணம் மற்றும் மின் இணைப்பு கட்டணம் (Development Charges, Meter Caution Deposit & Service connection charges) ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ.9,13,540/-

தொகையினை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.9,13,540/- ஐ த.நா.மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று த.நா.மின் வாரியத்திற்கு ரூ.9,13,540/- தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/1910/2020)

4. அ.கு அனுமதிக்கப்பட்டது.

5. ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டப் பணிகளை செயற்பொறியாளர்கள் மேற்பார்வையிட 01.11.2016 முதல் 31.12.2017 வரை உள்ள காலத்திற்கு வாடகை அடிப்படையில் இரண்டு இலகுரக வானகனங்கள் பணியமர்த்தி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.625 நாள்.30.08.2016ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 09.09.2016ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திரு.காதர்முகமத் யூசுப், ஈரோடு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதில் 31.10.2017-ம் தேதியுடன் ஒப்பந்தக்காலம் முடிவடைந்தது. இப்பணிக்காக அனுமதி வழங்கப்பட்ட ரூ.10.00 இலட்சத்தில் மீதமுள்ள தொகை ரூ.4.05,659/-ல் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ள மேற்படி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பழைய விலை விகிதத்திலேயே தொடர்ந்து 1.11.2017 முதல் 31.03.2018 வரை பணியை மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண். 120 நாள். 15.11.2017ல் அனுமதிக்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ. 2,94,659/- போக மீதமுள்ள தொகை ரூ. 1,11,000/- உள்ளது. மேலும் 01.04.2018 முதல் 30.09.2018 வரை மீதமுள்ள தொகை மற்றும் செலவினத் தொகை ரூ. 2.73.000/-க்கு ஆணையரின் நிர்வாக அனுமதி நாள். 23.03.2018ல் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கான செலவினத் தொகை ரூ. 2,66,000/- போக மீதமுள்ள தொகை ரூ. 1,18,000/-உள்ளது. மேலும் 01.10.2018 முதல் 31.03.2019 வரை மீதமுள்ள தொகை மற்றும் கூடுதலாக ரூ. 2,90,000/- ஆணையரின் நிர்வாக அனுமதி நாள். 27.09.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ. 4,08,000/-ஆகும். 01.10.2018 முதல் 31.03.2019 வரை செலவினம் ரூ. 2.32 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ. 1.76 ஆகும். மேலும் 01.04.2019 முதல் 30.09.2019க்கு மீதமுள்ள தொகை ரூ. 1,76 மற்றும் 2.32 இலட்சத்திற்கு 27.03.2019ல் ஆணையரின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதற்கான செலவினத் தொகை ரூ. 4,24,058/- ஆகும் கூடுதல் செலவினம் ரூ. 16,058/-க்கும் 01.10.2019 முதல் 31.03.2020 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். 148 நாள். 21.11.2019 அனுமதிக்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ. 4,77,912/- ஆகும். கூடுதல் செலவினம் ரூ. 27,912/- ஆகும்.

மேலும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் சிப்பம்-2ல் மீதமுள்ள பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளாதாலும் மேலும் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதாலும் அனைத்து பணிகளையும் இரு செயற்பொறியாளர்கள் மேற்பார்வையிட வேண்டியுள்ளது. எனவே இரு இலகுரக வாகனங்களை 01.04.2020 முதல் 30.09.2020 வரை மேலும் 6 மாத காலத்திற்கு இயக்க அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கு தோரயமாக ரூ.4.50 இலட்சம் செலவாகும். மேலும் ஏற்கனவே பணியை மேற்கொண்டுவரும் திரு.காதர்முகமத் யூசுப், அவர்கள் ஏற்கனவே அளித்த ஒப்பந்த தொகையிலேயே பணியை மேற்கொள்ள 16.03.2020ல் சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே பணியை மேற்கொள்ள இரண்டு செயற்பொறியாளர்களுக்கு பணிகள் மேற்பார்வையிட இரண்டு வாகனங்கள் வாடகை

அடிப்படையில் அமர்த்தவும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதமான ஒரு நாள் வாடகை ரூ.960/- மற்றும் எரிபொருள் செலவு, ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.6.50/- வீதம் ஏற்கனவே ஒப்பந்தபுள்ளியில் தெரிவித்துள்ள விலை விகிதத்திலேயே தொடர்ந்து பணியை மேற்கொள்ளவும், பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், 01.10.2019 முதல் 31.03.2020 வரை அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 4,50,000/- ஐ விட கூடுதலாக ரூ.27,912/- செலவாகிறது. எனவே இக்கூடுதலான செலவு தொகை ரூ. 27,912/- மற்றும் (01.04.2020 முதல் 30.09.2020 வரை) 6 மாதத்திற்கு ஆகும் செலவுத் தொகை ரூ. 4,50,000 ஆக மொத்தம் ரூ. 4,77912/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் (இ1/21927/2006)

**5. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

6. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/J2/2020-6, நாள்.24.03.2020 ஆம் தேதிய அறிவுரையில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசனிகளை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக அவசர அவசியத்தை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதியும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் விரைவாக மேற்கொள்ளவும் எத்தனால் திரவம் நிரப்புவதற்கு 22 எண்ணிக்கை பிளாஸ்டிக் கேன்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் அவற்றை கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டது

பணியின் அவசரஅவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் இப்பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது.

அதில் குறைந்த விலைப்புள்ளி ரூ.504.00/–க்கு வழங்கியுள்ள M/S.கே.என்.பிரசன்னா, ஈரோடு என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் அதனை ஏற்று மேற்படி 22 எண்ணிக்கை பிளாஸ்டிக் கேன்கள் கொள்முதல் செய்தமைக்கும், அதற்குரிய பட்டியல் தொகை ரூ.11,088.00/–ஐ கொரோனா நிதியிலிருந்து M/S.கே.என்.பிரசன்னா, ஒப்பந்ததாரருக்கு வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/87/2020)

**6. பதிவு செய்யப்பட்டது.**

**7.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 ஆம் தேதிய அறிவுரையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசனி தடுப்பு பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகாரணங்கள் பயன்படுவதை உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–

ன் கீழ் 200 எண்ணிக்கை முழு உறைகள் மற்றும் 200 எண்ணிக்கை சிறப்பு கையுறைகள் ஆகிய பாதுகாப்பு உபகாரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் ஸ்ரீ விசாலம் ட்ரேடர்ஸ், சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.1,45,000/—ஐ வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/1897/2020)

7. பதிவு செய்யப்பட்டது.

8. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020—6/J2, நாள்.24.03.2020 ஆம் தேதிய அறிவுரையில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக அம்மா உணவக பணியாளர்களுக்கு உணவு பொருட்களை சமைப்பதற்கு முன்பும், சமைத்த பிறகு உணவு பரிமாறும்பொழுதும் கைகளை நன்றாக கழுவி சுத்தம் செய்து பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களுக்கு வழங்க 5000 எண்ணிக்கை சோப்புகள் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

பணியின் அவசரஅவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் இப்பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15—ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அரசு நிறுவனமான இணைப்பதிவாளர், மாவட்ட நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலை மூலம் மேற்படி 4906 எண்ணிக்கை சோப்புகள் மட்டும் வாங்கப்பட்டதற்கும், அதற்குரிய பட்டியல் தொகை ரூ.1,88,270/—ஐ கொரோனா நிதியிலிருந்து மேற்படி மாவட்ட நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலைக்கு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/1893/2020)

8. பதிவு செய்யப்பட்டது.

9. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020—6/J2, நாள்.09.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020—10/J2, நாள்.24.03.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினிகளை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக அவசர அவசியத்தை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதியும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் விரைவாக மேற்கொள்ளவும் லைசால் திரவம் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1000 லிட்டர் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டது

பணியின் அவசரஅவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் இப்பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15—ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது.

அதில் குறைந்த விலைப்புள்ளி ரூ.129.92/—க்கு வழங்கியுள்ள M/S.கே.என்.பிரசன்னா, ஈரோடு என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் அதனை ஏற்று மேற்படி 1000 லிட்டர் லைசால் திரவம் கொள்முதல் செய்தமைக்கும்,

அதற்குரிய பட்டியல் தொகை ரூ.1,29,920/—ஐ கொரோனா நிதியிலிருந்து M/S.கே.என்.பிரசன்னா, ஒப்பந்ததாரருக்கு வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/1893/2020)

**9. பதிவு செய்யப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சி பகுதியில் கொடிய நோயானா கொரானா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட தமிழக அரசின் உத்தரவின்படி அரசு அலுவலகங்களுக்குள் வரும் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களின் கைகள் மற்றும் கால்களை நோய்கிருமி நாசினி கொண்டு சுத்தப்படுத்தி கொள்வதற்காக மண்டலம்—4 அலுவலகத்தில் எட்டு (நாசில்) குழாய்களை கொண்ட ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் மூலம் அமைக்கப்பட்டுள்ள கைகழுவும் தொட்டி, பி.வி.சி குழாய்கள் மற்றும் அதற்குரிய உதிரி பாகங்கள் கொண்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று தனித்தனி குழாய்கள் அமைத்து தரைதளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கிருமி நாசினி ஆயில், சோப்பு, மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்களக்கு முகக்கவசம், கையுறை மற்றும் நோய் தடுப்பு விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் ஆகியவற்றை வாங்கி பயன்படுத்தவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1.35 இலட்சதிற்கு 19.03.2020 ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை போர்க்கால அடிப்படையில் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15— ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,34,939/—ஐ திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(H2/ 1991 /2020)

**10. பதிவு செய்யப்பட்டது.**

**11.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020/J1, நாள்.09.03.2020 மற்றும் ந.க.எண்.5437/2020—6/J2, நாள்.24.03.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக முககவசங்கள் (Mask) அணிந்து பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15—ன் கீழ் பாதுகாப்பு முககவசங்கள் (Mask) 50,000 எண்ணிக்கை கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் லாரா எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.4,99,800/—ஐ கொரோனா நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/1897/2020)

11. பதிவு செய்யப்பட்டது.

**12.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 மற்றும் ந.க.எண்.5437/2020–8/J2, நாள்.31.03.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பாதுகாப்பு உபகாரணங்கள் மற்றும் மஞ்சள் பைகள் ஆகியவற்றை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பாதுகாப்பு கண்கண்ணாடி 500 எண்ணிக்கை மற்றும் 1000 எண்ணிக்கை மஞ்சள் பைகள் (51.30 கிலோ) கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் நாஸ்கோ மினரல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.53,869/–ஐ கொரோனா நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/1897/2020)

12. பதிவு செய்யப்பட்டது.

**13.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்– 4க்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக தமிழக அரசு பிறப்பித்துள்ள ஊரடங்கு சட்டம் 144 நடவடிக்கையில் உள்ளபடியால், கீழ்கண்ட பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பழுதடைந்துள்ள PVC தொட்டிகளை மாற்றியமைக்கும்படி வார்டு எண். 51 ஈ.எம்.எம் வீதியில் உள்ள 2000 லி PVC டேங்க் 1 எண்ணிக்கை, வார்டு எண். 52 பொய்யேரிக்கரை பொதுக்கழிப்பிடத்தில் 2000 லி PVC டேங்க் 2 எண்ணிக்கை, பாலசுப்ராயுலு வீதி பள்ளியில் 3000 லி PVC டேங்க் 1 எண்ணிக்கை, வார்டு எண். 55 காரைவாய்க்கால் பகுதியில் சத்துணவு மையம் அருகில் 2000 லி PVC டேங்க் 1 எண்ணிக்கை மற்றும் வார்டு எண். 60 மணலி கந்தசாமி வீதி (கல்லாவரை) ல் 5000 லி PVC டேங்க் 1 எண்ணிக்கை ஆகியவை அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்ட படியால் வெய்யில் மற்றும் மழையின் கால மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக PVC தொட்டி உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் இந்த தொட்டியின் மூலம் மேற்கண்ட பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணற்று நீர் விநியோகம் பாதிக்கப்பட்டு, இப்பகுதி பொதுமக்கள் போதிய தண்ணீர் வசதி இன்றி மிகவும் பாதிப்படைந்துள்ளனர். எனவே பழுதடைந்துள்ள பழைய 2000 மற்றும் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட PVC தொட்டிகளுக்கு பதிலாக புதிய PVC தொட்டிகளை வாங்கி பொருத்த தயார் செய்யப்பட்டுள்ள ரூ.1.92 இலட்சத்திற்கு 07.04.2020 ல் ஆணையர் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15– ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,91,578/– ஐ திரு.V. தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(H2/1992/2020)

**13. பதிவு செய்யப்பட்டது.**

14. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–10/J2, நாள்.09.04.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும், சுய உதவிக்குழு பணியாளர்களுக்கும் அம்மா உணவகங்களில் உரியமுறையில் உணவு வழங்க தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறும், தினசரி மூன்று வேளைகளுக்கும் சூடான, சுகாதாரமான உணவு வழங்குமாறும் அம்மா உணவகங்களுக்கு வருகை தருகின்ற அனைத்து பொது மக்களுக்கும் தேவையான உணவு வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் ஈரோடு மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 11 எண்ணிக்கை அம்மா உணவகங்களில் மூன்று வேளையும் உணவு வழங்க 12,000 எண்ணிக்கை பாக்குமட்டை தட்டுக்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் ஸ்ரீ சாய் ட்ரேடர்ஸின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.30,000/–ஐ கொரோனா நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/2154/2020)

**14. பதிவு செய்யப்பட்டது.**

**15.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 சுற்றறிக்கையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினி தெளிக்கவும், தெளிக்கப்படுவதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே சூழ்நிலையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றம் பினாயில் ஆகிய கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய TNSTC (CBE) ERODEREGIN, EMP-CO-OP STORES LTD, PE50. C2-EVK SAMPATH NAGAR, ERODE -11 நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.28.23 லட்சத்தினை கொரோனா தடுப்பு நிதியிலிருந்து / பொது நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**15. பதிவு செய்யப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சி பகுதியில் கொடிய நோயானா கொரானா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட தமிழக அரசின் உத்தரவின்படி கொரானா வைரஸ் நோய் தொற்று மேற்கொண்டு பரவாமல் தடுக்கும் பொருட்டு மாநகராட்சி பகுதிகளில் கொரானா வைரஸ் பாதித்த பகுதிகள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் பகுதிகளில் பிளிசிங் பவுடர் (கிருமி நாசினி) கொண்டு சுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பிளிசிங் பவுடர் (கிருமி நாசினி) 15 டன் வாங்கி பயன்படுத்துவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு 19.03.2020 ல் ஆணையர் அனுமதி பெறப்பட்டு பணியை போர்க்கால அடிப்படையில் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15– ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.6,99,000/–ஐ திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**16. பதிவு செய்யப்பட்டது.**

**17.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 சுற்றறிக்கையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பாதிப்பு ஏற்பட உள்ளதாக கருதப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு கையில் அடையாள முத்திரை இட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே சூழ்நிலையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் ரப்பர் ஸ்டாம்ப் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய RM.S. SETHU BALAJI, 1204/A, Navasakthi Complex,Mettur Road, Erode – 638 011 அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி அவர்களின் பட்டியல் தொகை ரூ.27,000 கொரோனா தடுப்பு நிதியிலிருந்து / பொது நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**17. பதிவு செய்யப்பட்டது.**

**18.** ஈரோடு மாநகராட்சி பகுதியில் கொடிய நோயானா கொரானா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட தமிழக அரசின் உத்தரவின்படி கொரானா வைரஸ் நோய் தொற்று மேற்கொண்டு பரவாமல் தடுக்கும் பொருட்டு மாநகராட்சி பகுதிகளில் கொரானா வைரஸ் பாதித்த பகுதிகள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் பகுதிகளில் பிளிசிங் பவுடர் (கிருமி நாசினி) கொண்டு சுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பிளிசிங் பவுடர் (கிருமி நாசினி) 25 டன் வாங்கி பயன்படுத்துவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.11.65 இலட்சத்திற்கு 16.04.2020 ல் ஆணையர் அவர்களின் அனுமதி

பெறப்பட்டு பணியை போர்க்கால அடிப்படையில் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15– ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.11,65,000/–ஐ திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**18. பதிவு செய்யப்பட்டது.**

**19.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 சுற்றறிக்கையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினி தெளிக்கவும், தெளிக்கப்படுவதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே சூழ்நிலையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய TNSTC (CBE) ERODEREGIN, EMP-CO-OP STORES LTD, PE50. C2-EVK SAMPATH NAGAR, ERODE -11 நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.2.81 லட்சத்தினை கொரோனா தடுப்பு நிதியிலிருந்து / பொது நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**19. பதிவு செய்யப்பட்டது.**

**20.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 சுற்றறிக்கையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பாதுகாப்பு உபகரணம் அணிவதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே சூழ்நிலையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் Cloth Mask (Reusable) (முக உறை) பாதுகாப்பு உபகரணம் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய TNSTC (CBE) ERODEREGIN, EMP-CO-OP STORES LTD, PE50. C2-EVK SAMPATH NAGAR, ERODE -11 நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.2,56,250–யை கொரோனா தடுப்பு நிதியிலிருந்து / பொது நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**20. பதிவு செய்யப்பட்டது.**

**21.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 சுற்றறிக்கையில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பாதுகாப்பு உபகரணம் அணிவதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே சூழ்நிலையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் Personal Protective Equipment (முழு உறை) பாதுகாப்பு உபகரணம் கொள்முதல் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய TNSTC (CBE) ERODEREGIN, EMP-CO-OP STORES LTD, PE50. C2-EVK SAMPATH NAGAR, ERODE -11 நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.3.50 லட்சத்தினை கொரோனா தடுப்பு நிதியிலிருந்து / பொது நிதியிலிருந்து வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்1/1672/2020)

**21. பதிவு செய்யப்பட்டது.**

22. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக மேற்குபுற முதல் தளக் கடை எண். 17–னை கொங்கு நாடு விவசாயிகள் சங்கத்தினர் 2006–ம் ஆண்டு முதல் வாடகைக்கு எடுத்து நடத்தி வந்ததாகவும், தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உயர்த்தப்பட்ட வாடகை மிக அதிகமாக உள்ளதால் தொடர்ந்து வாடகை செலுத்த இயலாது என தெரிவித்து மேற்காண் கடையை 31.05.2019 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்தனர். அதன்படி மேற்படியாரின் உரிமத்தை மாமன்றம் தனது 11.07.2019–ந் தேதிய 7–ஆம் எண் தீர்மானத்தில் ரத்து செய்து உத்திரவிடப்பட்டது.

மேற்படி கடைக்கு கொங்கு நாடு விவசாயிகள் சங்கத்தினரால் ஜனவரி–2017 முதல் நாளது தேதி வரை வாடகை நிலுவைத் தொகை ரூ.4,11,797– மற்றும் அதற்கான GST, அபராதம் ஆகியவற்றை இம்மாநகராட்சிக்கு செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. மேற்படி வாடகை நிலுவைத் தொகையினை செலுத்த தெரிவித்து அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் நாளது தேதி வரை தொகை செலுத்தப்படாமல் உள்ளது. எனவே மேற்படியார் மீது வழக்கு தொடர்ந்து நிலுவை வாடகைத் தொகையினை வசூல் செய்வதற்கும், வழக்கிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50,000–க்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அ) பேருந்து நிலைய வணிக வளாக மேற்குபுற முதல் தளக் கடை எண். 17–ன் குத்தகைதாரரான கொங்கு நாடு விவசாயிகள் சங்கத்தினரால் வாடகை நிலுவைத் தொகை ரூ.4,11,797– செலுத்தப்படாததால், நிலுவைத் தொகையினை வசூல் செய்வதற்கு மேற்படியார் மீது மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) வழக்கிற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000–க்கு அனுமதிக்கலாம்.

இ) அவசரம் அவசியம் கருதி மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

22. அ.கு அனுமதிக்கப்பட்டது.

23. இம்மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் மற்றும் முதல் தள பி பிளாக் (வரி விதிப்பு எண். 056/202, 056/492) கடைகளை 17.11.1980 முதல் ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை மேலாண்மை இயக்குநர் அவர்களால் குத்தகைக்கு எடுத்து நடத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி குத்தகை கடைகளில் சிந்தாமணி சிறப்பு அங்காடி செயல்பட்டு வருகிறது.

மேற்படி குத்தகை இனங்களுக்கு மாநகராட்சி குத்தகை இன ஏல நிபந்தனைகளின்படி 30.06.2016 வரை கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி பிரதிமாத வாடகை (குத்தகை) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் பி பிளாக் | 056/202 | ரூ.26088– |
| 2) | பேருந்து நிலைய வணிக வளாக முதல்தளம் பி பிளாக் | 056/492 | ரூ.7605– |

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி 9 ஆண்டுகளுக்கான குத்தகை உரிமம் காலம் முடிவடைகிறது. அதன்படி குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வெளிச்சந்தை மதிப்பிலான (Market Rate) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீடித்துக் கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கலாம் என்பதின்படி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில், 30.06.2016–ந் தேதிய மாமன்ற தீர்மான எண். 665–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி, மேற்படி கடைகளுக்கு கீழேகுறிப்பிட்டுள்ள விவரப்படி 01.07.2016 முதல் வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் பி பிளாக் | 056/202 | ரூ.97440–<br>(ஒரு மாத வாடகை 01.07.2016 முதல்) |
| 2) | பேருந்து நிலைய வணிக வளாக முதல்தளம் பி பிளாக் | 056/492 | ரூ.41760–<br>(ஒரு மாத வாடகை 01.07.2016 முதல்) |

மேற்படி குத்தகையினங்கள் 01.07.2016 முதல் அரசாணையின்படி வாடகை உயர்த்தப்பட்டு மூன்றாண்டு காலம் உரிமம் புதுப்பிக்கப்பட்டு 15% உயர்த்தப்பட்டு 01.04.2019 முதல் கீழ்காணுமாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் பி பிளாக் | 056/202 | ரூ.112056–<br>(ஒரு மாத வாடகை 01.07.2016 முதல்) |
| 2) | பேருந்து நிலைய வணிக வளாக முதல்தளம் பி பிளாக் | 056/492 | ரூ.48026–<br>(ஒரு மாத வாடகை 01.07.2016 முதல்) |

மேற்படி கடைகளுக்கு 30.06.2016 முடிய வாடகைத் தொகை, அரசாணையின்படி 01.07.2016 முதல் உயர்த்தப்பட்ட வாடகை மற்றும் 01.04.2019 முதல் உரிமம் புதுப்பிக்கப்பட்ட தொகையய பிரதி மாத வாடகையாக செலுத்தப்படாமல், வரிவிதிப்பு எண். 056/492–ற்கு ரூ.8974– மற்றும் வரிவிதிப்பு எண். 056/202–ற்கு ரூ.30784– நடப்பு மாதத்தில் தற்போதைய வாடகையாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் உயர்த்தப்பட்ட வாடகை நிலுவை, GST மற்றும்

அதற்கான அபராதம் ஆகியவற்றை மார்ச்–2020 வரை செலுத்தப்படாததால் கீழேகுறிப்பிட்டுள்ளவாறு மேற்படி கடைகளுக்கு வாடகை நிலுவையாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் பி பிளாக் | 056/202 | வாடகை – ரூ. 45,43,169–<br>GST 18% – ரூ. 8,17,763–<br>அபராதம் 18% – ரூ. 15,18,366–<br>------------<br>மொத்தம்–ரூ.68,79,298–<br>------------ |
| 2) | பேருந்து நிலைய வணிக வளாக முதல்தளம் பி பிளாக் | 056/492 | வாடகை – ரூ. 16,47,442–<br>GST 18% – ரூ. 2,96,548–<br>அபராதம் 18% – ரூ. 4,63,155–<br>------------<br>மொத்தம்–ரூ.24,07,145–<br>------------ |

எனவே மேற்படி குத்தகை இனங்களுக்கு நாளது தேதி வரை செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத் தொகை ரூ.68,79,298– மற்றும் ரூ.24,07,145– ஆக மொத்தம் ரூ.92,86,443–ஐ நாளதுதேதி வரை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. வாடகை நிலுவைத் தொகையினை செலுத்த தெரிவித்து அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், பலமுறை நேரிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் மேற்படியார் நாளது தேதி வரை வாடகை நிலுவைத் தொகை செலுத்தப்படாமல் உள்ளனர்.

எனவே சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் செயல்பட்டு வரும் குத்தகை இனங்களுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகை ரூ.45,43,169 மற்றும் ரூ.16,47,442 ஆக மொத்தம் ரூ.61,90,611–ஐ GST மற்றும் அபராதத் தொகையுடன் நாளது தேதிவரை மாநகராட்சிக்கு செலுத்தப்படாததால், மேற்படியார் மீது வழக்கு தொடர்ந்து நிலுவைத் தொகையினை வசூல் செய்வதற்கும், வழக்கிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000–க்கும் ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அ) பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் மற்றும் முதல் தள பி பிளாக் (வரி விதிப்பு எண். 056/202, 056/492) சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் செயல்பட்டு வரும் குத்தகையினத்திற்கு ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை மேலாண்மை இயக்குநர் அவர்களால் வாடகை நிலுவைத் தொகை ரூ.61,90,611– செலுத்தப்படாததால், நிலுவைத் தொகையினை GST மற்றும் அபராதத் தொகையுடன் வசூல் செய்வதற்கு மேற்படியார் மீது மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) வழக்கிற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000–க்கு அனுமதிக்கலாம்.

இ) அவசரம் அவசியம் கருதி மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

23. அ.கு அனுமதிக்கப்பட்டது.

24. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜ் சாலை வணிக வளாக தரைத் தளக் கடை எண். 8-ஐ பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தனர். மேற்படியார் தனது 04.02.2019-ம் தேதிய கடிதத்தில் கடையினை 31.03.2020 உடன் காலி செய்து கொள்வதாகவும், அதற்காக செலுத்தியுள்ள வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். காமராஜ் சாலை வணிக வளாக தரைத் தளக் கடை எண். 8 குத்தகையினத்திற்கு பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய 9 மாத வாடகை வித்தியாசத் தொகை ரூ.7911— மற்றும் அதற்குண்டான GST ரூ.1424— ஆக மொத்தம் ரூ.**9335—** மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினர் கீழ்க்கண்டுள்ளவாறு வைப்புத் தொகை செலுத்தியுள்ளனர்.

| வ. எண். | வாடகை முன்பணம் செலுத்தப்பட்ட விவரம் | | | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | RF 4018 Register Vol-I P.No. 46 (Main) | பவானி | 8799/22.10.1993 (1993-1994) | **11978—** |
| 2. | RF 4018 Register Vol-II P.No. 66 (Main) | பவானி கோ—ஆப். சொசைட்டி | 875/01.10.2007 (2007-2008) | **11871—** |
| 3. | RF 4018 Register Vol-III P.No. 60 (Main) | Assistant Director, Handloom | 2103743/19.06.2012 (2012-2013) | **5985—** |
| 4. | RF 4018 Register Vol-I P.No. 27 (Zone-II) | Assistant Director, Handloom | 15235529/27.11.2015 (2015-2016) | **6876—** |
| | | | **மொத்தம்** | **36710—** |

மேற்கண்ட ஏல வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

காமராஜ் சாலை வணிக வளாக தரைத் தளக் கடை எண். 8 குத்தகையினத்திற்கு பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய 9 மாத வாடகை வித்தியாசத் தொகை மற்றும் அதற்குண்டான GST ஆக ரூ.**9335—**ஐ அவர்கள் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.**36710—**ல் பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள தொகை ரூ.**27,375—**ஐ பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினருக்கு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி ஏல வைப்புத் தொகை ரூ.36,710-ல் மாநகராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய தொகை ரூ.9335-ஐ பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள தொகை ரூ.27,375-ஐ பவானி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினருக்கு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**24. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

25. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோடு உட்புறம் உள்ள 19-ம் எண் கடைக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 18.03.2020-ஆம் தேதியன்று இரண்டாவது முறையாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஏலக் கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | | ஏலக் கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆர்.கே.வி. ரோடு பின்புறம் உள்ள உட்புறக் கடை எண். 19 | 1. | கே. குமரவேல் | ஏலம் கோரவில்லை |
| | | 2. | அ. கோகுல் | ரூ.4200- |

மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்டவரில் ஒருவரான திரு. கே. குமரவேல் என்பவர் ஏலக் கேள்வித் தொகை ஏதும் கோரவில்லை. மேலும் ஏலப் பதிவேட்டில் கையெழுத்திட மறுத்து சென்றுவிட்டார். மற்றொருவரான திரு. அ. கோகுல் என்பவர் மாத வாடகை ரூ.4200-க்கு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படி ஏலக் கேள்வியானது அரசாங்க மதிப்பு ரூ.4000-ஐ விட கூடுதலாக உள்ளது.

அதன்படி திரு. அ. கோகுல் என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.4200-ஐ ஏற்கவும், மேற்படியாருக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

ஆர்.கே.வி. ரோடு உட்புறம் உள்ள 19-ம் எண் கடைக்கு திரு. அ. கோகுல் என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**25. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**26.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல்தள கடை எண். **9**–ன் (வ.வி.எண். **056/BD01/00387**) குத்தகைதாரர் திரு. ஆர். சேகர் என்பவரது **11.03.2020**–ம் தேதிய கடிதத்தில் மேற்படி குத்தகைக்குரிய கடையினை தனது சொந்த காரணங்களால் தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் கடையை **31.03.2020** உடன் மாநகராட்சிக்கு திரும்ப ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படியாரின் குத்தகை உரிமத்தை 31.03.2020 உடன் ரத்து செய்ய மாமன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல்தள கடை எண். 9—ஐ குத்தகைதாரர் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால், மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திரு. ஆர். சேகர் குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்தமைக்கு அனுமதி வழங்கலாம். ஏலம் குறைவாக கோரப்பட்டால் மேற்படி ஒப்பந்த காலத்திற்குண்டான வாடகை இழப்பினை அன்னாரின் வைப்புத் தொகையில் ஈடு செய்து கொள்ளலாம்.

கோப்பு எண். அ1/982/2017

26. அ.கு அனுமதிக்கப்பட்டது.

27. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக 35-ம் எண் கடைக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 18.03.2020-ஆம் தேதியன்று இரண்டாவது முறையாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஏலக் கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | | ஏலக் கேள்வித் தொகை ரூ. |
| 1. | பேருந்து நிலைய புதிய வணிக வளாக கடை எண். 35 | **1.** | **ஏ. முஸ்தபா** | **ரூ.9100-** |
| | | 2. | எம். யாசர் | ரூ.9000- |

மேற்கண்ட ஏல இனத்திற்கு திரு. ஏ. முஸ்தபா என்பவர் மாத வாடகை ரூ.9100-க்கு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.மேற்படி ஏலக் கேள்வியானது திரு.எம். யாசர் என்பவர் கோரியுள்ள ஏலக் கேள்வித் தொகை மற்றும் சென்ற மாத வாடகை மதிப்பு ரூ.8800-ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

அதன்படி திரு. ஏ. முஸ்தபா என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.9100-ஐ ஏற்கவும், மேற்படியாருக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

பேருந்து நிலைய வணிக வளாக 35-ம் எண் திரு. ஏ. முஸ்தபா என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

27. அ.கு அனுமதிக்கப்பட்டது.

28. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல்தள கடை எண். 9—ன் (வ.வி.எண். 056/BD01/00387) குத்தகைதாரர் திரு. ஆர். சேகர் என்பவர் மேற்படி குத்தகைக்குரிய கடையினை தனது சொந்த காரணங்களால் தொடர்ந்து நடத்த இயலாது என

இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால் குத்தகைதாரது உரிமம் 31.03.2020 உடன் ரத்து செய்யப்பட்டது.

எனவே வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல்தள கடை எண். 9–ஐ பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000–க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை 01.05.2020–க்கு பிறகு மேற்கொள்வதற்கு அனுமதியும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) வி.சி.டி.வி. ரோடு வணிக வளாக முதல்தள கடை எண். 9–ஐ பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 50,000–க்கும் அனுமதி வழங்கலாம்.

ஆ) கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை 01.05.2020–க்கு பிறகு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**28. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

29. மாநகராட்சியால் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை தொகையுடன் சேர்த்து 30.06.2017 வரை சேவை வரி வசூலிக்கப்பட்டு உரிய சேவை வரி தலைப்பில் அரசுக்கு செலுத்தப்பட்டு வந்தது. மேற்படி சேவை வரி விதிகளில் இந்திய அரசு, நிதி அமைச்சகம் (வருவாய் துறை) அறிவிக்கை எண். 25/2012, நாள். 20.06.2012 (Clause 39)–ல் பேருந்து நுழைவுக் கட்டணம், ஆடுவதைக் கூடம், இரு சக்கர வாகன நிறுத்துமிடம், தினசரி மற்றும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலித்தல், கட்டண கழிப்பிடம் ஆகிய இனங்களுக்கு சேவை வரி வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது,

01.07.2017 முதல் சேவை வரி ரத்து செய்யப்பட்டு சரக்கு மற்றும் சேவை வரி (GST) முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. சேவை வரி (ST)–யில் விலக்களிக்கப்பட்ட குத்தகை இனங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிகளில் வரிவிலக்கு அளிக்கப்படுவது குறித்து எவ்வித விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பாக சேவை வரி ஆலோசகரிடம் விளக்கம் கோரப்பட்டபொழுது, GST Advance Ruling உட்பிரிவு (1) பிரிவு 97–ல் தெரிவித்துள்ளபடி அரசிடமிருந்து உரிய விளக்கம் பெறுவதற்கு படிவம் GST ARA–01–ல் விண்ணப்பித்து CGST தலைப்பில் ரூ.5000–மும், SGST தலைப்பில் ரூ.5000–மும் வைப்புத் தொகை செலுத்தப்படும் பட்சத்தில் GST விதிகளில் விலக்கு அளிக்கப்படுவது குறித்து விரிவான விளக்கம் Advance Ruling முறையில் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மேற்படி சரக்கு மற்றும் சேவை வரி (GST)–யில் வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ள குத்தகையினங்களுக்கான விவரங்களை Advance Ruling முறையில் விண்ணப்பித்து பெறுவதற்கும், அதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.10000– செலுத்துவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் GST Advance Ruling முறையில் விண்ணப்பித்தல் மற்றும் சேவை வரி அலுவலகத்தில் நடைபெறும் அதற்கான தொடர் விசாரணையில் கலந்து கொள்வதற்கு திரு. சங்கர்நாராயணன் சேவை வரி ஆலோசகரை நியமிக்கவும், அதற்கான ஆலோசகர் கட்டணமாக உத்தேசத் தொகை ரூ.25,000–க்கும் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணிகளுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

அ) சரக்கு மற்றும் சேவை வரி (GST)–ல் வரிவிலக்கு வழுங்கப்பட்டுள்ள குத்தகையினங்களுக்கான விவரங்களை Advance Ruling முறையில் விண்ணப்பித்து பெறுவதற்கும், அதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.10000– செலுத்துவதற்கும் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி GST Advance Ruling முறையில் விண்ணப்பித்தல் மற்றும் சேவை வரி அலுவலகத்தில் நடைபெறும் அதற்கான தொடர் விசாரணையில் கலந்து கொள்வதற்கும் திரு. சங்கர்நாராயணன் சேவை வரி ஆலோசகரை நியமிக்கவும், அதற்கான ஆலோசகர் கட்டணம் உத்தேசத் தொகை ரூ.25,000–க்கும் அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்ம்

ந.க.எண். அ1/3760/2017

**29. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**30.** உள்ளாட்சித் தேர்தல்–2019 ஈரோடு மாவட்டம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாக்குப் பதிவிற்கு தேவையான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை கர்நாடக மாநிலம் மைசூரிலிருந்து எடுத்து வருவதற்கு செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அவர்களின் ந.க.எண். 3193/2019/EG 2–2 நாள். 07.09.2019 ஆம் தேதிய கடிதம் மற்றும் ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மவாட்ட ஆட்சித் தலைவர் (உள்ளாட்சித் தேர்தல்) அவர்களின் ந.க.எண்.20248/2019/PE1 நாள்.13.09.2019 ன் படியும், ஈரோடு மாநகராட்சியிலிருந்து மூன்று அலுவலர்கள், மேற்படி மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக கொண்டு வருவதற்கு துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள் நான்கு நபர்கள் மற்றும் வீடியோ கிராபர் ஒருவரும் மைசூருக்கு சென்று வாகனங்களில் எடுத்து வருவதற்கு உத்திரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சியிலிருந்து வாகனங்களில் சென்று எடுத்து வரப்பட்டு ஈரோடு மாநகராட்சியின் காமராஜர் மேல்நிலைப் பள்ளி கருங்கல்பாளையம் பள்ளி வளாகத்தில் உள்ள இருப்பு அறையில் வைத்து மாநகராட்சி கட்டுப் பாட்டில் வைக்கப்பட்டதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் ஏற்றுக் கூலி / இறக்குக் கூலி ஆகியவனவும், மேற்படி இருப்பு வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை முதற்கட்ட தரப் பரிசோதனை (First Level Checking) செய்திட வரும் BHARAT ELECTRICS LIMITED நிறுவன ஆய்வு அலுவலர்களால் ஆய்வுப் செய்யும் பணிக்கு வரும் ஆய்வு அலுவலர்களுக்குத் தேவையான உணவு, தங்கமிடம், பணி மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து பொருட்கள் ஏற்பாடு செய்திட வேண்டும் என்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் (உள்ளாட்சித் தேர்தல்) அவர்களின் ந.க.எண்.20248/2019/ உ.தே.1 நாள். 26.09.2019 ல் உத்திரடவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட பணிகளை செய்து முடித்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின்

விபரங்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அலுவலகத்தின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. மேற்காணும் பணிகளை செய்வதற்கான தொகை ரூ. 8,67,292/–ற்கு செலவினம் மேற்கொண்டதற்கு மாநகராட்சியின் நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

உள்ளாட்சித் தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருதி செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கும் தொகை வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(சி4/23348/2019)

**30. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**31.** கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் கோவிட் – 19 நோய் தொற்று ஏற்படாமல் தடுக்கும் வகையில் நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடை பிடிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நோய் தொற்று ஏற்படாமல் தடுக்கும் வகையில் சமூக இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிக்கவும் மற்றும் நோய் ஏற்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கவும் மேலும் மேற்படி பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உடனடியாக வழங்கவும் அவசியம் ஏற்பட்டது.

மேற்படி தேவையின் அவசிய அவசரம் கருதி மேற்படி பணிகளை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு – 15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய கீழ்கண்ட நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் ஏற்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலையின்பெயர் | குறைந்த விலைவிகிதம் வழங்கிய நிறுவனம் / தொகை | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | களப்பணியாளர்களுக்கு மாநகராட்சி சார்பாக அடையாள அட்டை அச்சடித்து வழங்குதல் | M/s Green Enviro systems. Erode - Rs. 42,500/- | **42500/–** |
| 2) | கிருமி நாசினி தெளிப்பவர்களுக்கான கண்கண்ணாடிகள் விநியோகம் செய்தல். | M/s Sangamam Agencies CBE - Rs.99120/- | **99120/–** |
| 3) | வாகனத்தில் பொருத்தும் கிருமி நாசினி தெளிக்கும் மோட்டார் மற்றும் அதற்கான குழாய்கள் (Hose) விநியோகம் செய்தல். | M/s Whale Enterprices (p) Ltd. CBE - Rs.2,66,600/- | **266600/–** |
| 4) | களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்கான கையுறைகள் விநியோகம் செய்தல். | M/s Sangamam Agencies CBE - Rs.441000/- | 441000/- |

மேற்கண்டவாறு குறைந்த விலைவிகிதம் வழங்கிய நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை ஏற்று பணி மேற்கொண்டு அதற்கான பட்டியல் தொகைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட விபரத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ1/1571/2020)

**31. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

32. ஈரோடு மாநகராட்சி- R.K.V சாலையில் தினசரி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மார்க்கெட்டிற்கு பொது மக்கள் சென்று வரும் பாதைகள் மிகவும் குறுகலாக உள்ளன. அது மட்டுமின்றி கடைகளும் மிக அருகில் உள்ளன. இந்நிலையில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கத்தை தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சமுதாய இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டுமென மத்திய மாநில அரசுகள் உத்திரவிட்டுள்ளது. மேலும் தற்போது ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மத்திய மாநில அரசுகளின் உத்தரவிற்கு இணங்கவும் RKV சாலையிலுள்ள தினசரி மார்க்கெட்டை மத்திய பேருந்து நிலையத்திற்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு இடமாற்றம் செய்யும் பொருட்டு பேருந்து நிலைய வளாகத்தில் தேவையான மின் விளக்கு வசதிகள் செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்கள். லாவண்யா எலக்ட்ரிகல்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.5,57,743/-ஐ திருவாளர்கள்.

லாவண்யா எலக்ட்ரிகல்ஸ், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ1/1905/2020)

**32. பதிவு செய்யப்பட்டது.**

33. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வைராபாளையத்தில் அமைந்துள்ள ஈரோடு பிரதான தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்து செய்யப்பட்டு மொத்தம் 22 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு 22.00 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மண்டலம்-1க்குட்பட்ட ஈரோடு பிரதான தலைமை நீரேற்று நிலையத்தில் 30 HP சேம்பர் குடிநீர் சேகரிப்பு கிணற்றில் மணல் அதிக அளவில் சேர்ந்துள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே

மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையத்தில் 30 HP சேம்பர் நீர் சேகரிப்பு கிணற்றில் மணல் அகற்றுதல் பணிகளை செய்யவும் உத்தேசிக்கப்பட்டது.

குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N.பிரசன்னா, ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 79,070/-ஐ திரு. K.N.பிரசன்னா, ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/1565/2020)

**33.** பதிவு செய்யப்பட்டது.

34. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-1க்குட்பட்ட வார்டு 3-ல் R.N.புதூர் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,67,214/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/616/2020)

**34.** பதிவு செய்யப்பட்டது.

35. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-1க்குட்பட்ட வார்டு 15-ல் கருங்கல்பாளையம் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே

மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்ப்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,97,193/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/618/2020)

**35. பதிவு செய்யப்பட்டது.**

36. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-1க்குட்பட்ட வார்டு 7-ல் பி.பெ அக்ரஹாரம் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்ப்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,09,440/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/617/2020)

**36. பதிவு செய்யப்பட்டது.**

37. ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் சிப்பம் -I,II,III மற்றும் IV பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கி செயல் பாட்டில் உள்ளது. மேற்கண்ட மனித ஆய்வு குழிகளில் அடைப்பு ஏற்படும் போது அதனை வாகனங்களின் மூலம் எடுக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் கழிவுநீரேற்றம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே வாகனங்கள் செல்ல முடியாத சாலைகளுக்கு

ஏற்ப்பட்டும் பாதாள சாக்கடை அடைப்பை நீக்க 7.5 HP Sewerage and Sludge motor விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணியை சுகாதார அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்கள். லாவண்யா எலக்ட்ரிகல்ஸ் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.5,85,760/-ஐ திருவாளர்கள். லாவண்யா எலக்ட்ரிகல்ஸ் ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ4/1907/2020)

**37. பதிவு செய்யப்பட்டது.**

38. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1வீரப்பன் சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் 120 HP பம்புசெட்டில் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. ஆகவே குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி வீரப்பன் சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் பம்புசெட்டின் பழுதினை சரி செய்யும் பணியினை மேற்கொள்ள மாநகராட்சி சட்டம் பிரிவு 15 நாள்.20.04.2020-ல் அனுமதியின் பேரில் பெறப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.குரு எலக்ட்ரிக்கல்ஸ் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்படையதாக இருந்ததால் அதனை ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.59360/-ஐ திருவாளர்.குரு எலக்ட்ரிக்கல்ஸ் ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ2/615/2020)

**38. பதிவு செய்யப்பட்டது.**

39. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1வீரப்பன் சத்திரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்து செய்யப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள சைபன் சிஸ்டம், 20 HP Vaccum Pump set தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட காரணத்தால் மேற்கண்ட பம்ப் செட் (shaft), பேரிங், பம்ப் இம்பலர், ஆயில் சீல், மோட்டாடா பம்ப் செட் கப்ளிங் டயர் பழுது ஏற்பட்டு Vaccum Pump Set இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்ய குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதம் வழங்கிய M/S. GURU ELECTRICAL WORKS, ERODE, அவர்களின்

விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 84,291/—ஐ M/S. GURU ELECTRICAL WORKS, ERODE அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ2/464/2020)

**39. பதிவு செய்யப்பட்டது.**

40. ஈரோடு மாநகராட்சி மண்டலம்—1ல் வார்டு எண்.3 ஆர்.என்.புதூர், வார்டு எண்.7 பி.பெ.அக்ரகாரம் அம்மா உணவகங்கள் ஆகியவை செயல்பாட்டில் உள்ளது. தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி உள்ளதை தொடர்ந்து, பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின்படி குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 144 ன் படி தடை உத்தரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகங்களில் பொதுமக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு ஆகிய மூன்று வேளைகளும் அதிக அளவிலான உணவு தயாரிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி அம்மா உணவகங்களில் UPS பயன்பாட்டில் இல்லை. இரவு நேரத்தில் உணவு தயாரித்து பொதுமக்களுக்கு உணவு வழங்கும் பொழுது அடிக்கடி மின்சா தடை ஏற்படுவதுடன் அம்மா உணவகம் முழுவதும் இருள் சூழ்ந்து விடுவதால் உணவு தயாரிக்கும் பணியும் தாமதப்படுகிறது. எனவே மேற்படி இரு அம்மா உணவகங்களுக்கும், வீரப்பன் சத்திரம் வரிவசூல் மையத்திலும் மொத்தம் 3 எண்ணிக்கை புதியதாக 1 KVA UPS மற்றும் 150 AH பேட்டரிகள் அமைத்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்று இப்பணியின் அவசர அத்தியாவசியம் பருதி மாநகராட்சி சட்டப்பிரிவு—15ன் கீழ் புதிய UPS மற்றும் பேட்டரிகள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்வதற்காக 16.04.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s. Green Enviro systems, Erode அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேற்படி பணியை செய்து முடித்தமையையும் அதற்கான பட்டியல் தொகை ரூ. 81,000/—ஐ M/s. Green Enviro systems, Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ2/2006/2001)

**40. பதிவு செய்யப்பட்டது.**

41. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண்.17 சூளை, வார்டு எண்.26 நாச்சியப்பா வீதி, வார்டு எண்.28 வ.ஊ.சி. பூங்கா ஆகிய அம்மா உணவகங்கள் செயல்பாட்டில் உள்ளது. தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி உள்ளதை தொடர்ந்து, பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின்படி குற்றவியல் நடைமுறைச் சட்டம் **1973** பிரிவு **144** ன் படி தடை உத்தரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகங்களில் பொதுமக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு ஆகிய மூன்று வேளைகளும் அதிக அளவிலான உணவு தயாரிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி அம்மா உணவகங்களில் UPS பயன்பாட்டில் இல்லை. இரவு நேரத்தில் உணவு தயாரித்து பொதுமக்களுக்கு உணவு வழங்கும் பொழுது அடிக்கடி மின்சா தடை ஏற்படுவதுடன் அம்மா உணவகம் முழுவதும் இருள் சூழ்ந்து விடுவதால் உணவு தயாரிக்கும் பணியும் தாமதப்படுகிறது. எனவே மேற்படி அம்மா உணவகங்களுக்கும் மொத்தம் **3** எண்ணிக்கை புதியதாக 1 KVA UPS மற்றும் **150** AH பேட்டரிகள் அமைத்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்று இப்பணியின் அவசர அத்தியாவசியம் பருதி மாநகராட்சி சட்டப்பிரிவு–**15**ன் கீழ் புதிய UPS மற்றும் பேட்டரிகள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்வதற்காக **16.04.2020** அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s. Green Enviro systems, Erode அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேற்படி பணியை செய்து முடித்தமையையும் அதற்கான பட்டியல் தொகை ரூ. **73,000/–**ஐ M/s. Green Enviro systems, Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/714/2020)

**41. பதிவு செய்யப்பட்டது.**

42. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்.46 மற்றும் 47க்குட்பட்ட என்.ஜி.ஜி.ஓ.காலனி சாலை, விநாயகர் கோவில் வீதி-10 (அண்ணமார் பெட்ரோல் பங்க் எதிரில்), டெலிபோன் நகர் மற்றும் பசுமை பாரதி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் பாதாள சாக்கடை திட்ட குழாய் மற்றும் ஊராட்சிக்கோட்டை குடிநீர் திட்டக்குழாய் பதிக்கும் பணிகளுக்காக சாலைகளை வெட்டி தோண்டப்பட்ட மண் குவியல்கள் மேற்கண்ட சாலைகளில் போடப்பட்டுள்ளதால், பொதுமக்களின் போக்குவரத்திற்கும், வாகன போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், இச்சாலைகளில் பள்ளி கல்லூரி வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ளதால் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்கள் செல்ல சிரமப்படுகின்றனர். எனவே, மேற்கண்ட பகுதிகளில் சாலைகளில் உள்ள மண் குவியல்களை JCB இயந்திரம், டிப்பர் மற்றும் டிராக்டர் மூலம் சமன்படுத்தி சாலைகளை போக்குவரத்திற்கு ஏதுவாக பாதையை சரி செய்ய உள்ளூர் விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை செய்ய அனுமதியும் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.55 இலட்சத்திற்கு 05.03.2020ல் ஆணையர் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,54,896/-ஐ திருவாளர்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ2/0561/2020)

**42. பதிவு செய்யப்பட்டது.**

43. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.17, 18 சக்தி நகர், மகாகவி பாரதியார் நகர், கல்லாங்கரடு மற்றும் கரட்டாங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மழைநீர் தேங்கி நின்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமமாக உள்ளது. எனவே கனிராவுத்தர் குளத்தில இருப்பு வைக்கப்பட்டுள்ள மண்ணினை வாடகை ஜே.சி.பி.டிப்பர், டிராக்டர் இயந்திரம் கொண்டு மேற்கண்ட சாலைகளில் நிரப்பி சமன் செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன்கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.69,552/-ஐ திருவாளர்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/0144/2020)

**43. பதிவு செய்யப்பட்டது.**

44. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண். 32ல் செங்கோடம்பாளையம் கோல்டன் சிட்டியில் உள்ள மாநகராட்சி பூங்காவினை அப்பகுதி மக்கள் பொழுது போக்கிற்காகவும், குழந்தைகள் விளையாடுமிடமாகவும் உபயோகித்து வருகின்றனர், மேற்படி பூங்காவினை பராமரிக்க போதிய மாநகராட்சி பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பூங்கா பராமரிப்பின்றி பொழிவிழந்து காணப்படுகிறது. மேலும், பூங்காவின் அருகில் உள்ள திறந்த வெளியிடம் மற்றும் திறந்த வெளி கிணறு பாதுகாப்பின்றி உள்ளது. எனவே, திறந்த வெளி கிணற்றிற்கு பாதுகாப்பு அரண் செய்தும் திறந்த வெளியிடத்திற்கு கம்பி வேலி அமைத்து அதில் மூலிகை செடிகள் வைத்து பராமரிப்பு செய்தும் மற்றும் பூங்காவினை பராமரிப்பு செய்து கொடுப்பதற்கு "கோல்டன் சிட்டி குடியிருப்போர் சங்கம்'' இசைவு தெரிவித்து விண்ணப்பித்துள்ளார்கள்.

கோல்டன் சிட்டி பூங்கா குடியிருப்பு பகுதியின் மையப்பகுதியில் அமையப்பெற்றுள்ளது மற்றும் திறந்த வெளியிடம் மற்றும் திறந்த வெளி கிணற்றிற்கு பாதுகாப்பு அரண் இல்லாத காரணத்தால் மேற்படி இடத்திற்கு கம்பி வேலி அமைத்து மூலிகை செடிகள் வைத்துப் பராமரிக்கவும் மற்றும் பூங்காவினை பராமரித்து பொதுமக்கள் பொழுதுபோக்கிற்கு அனுமதிக்க ஏதுவாக செங்கோடம்பாளையம் "கோல்டன் சிட்டி குடியிருப்போர் சங்கம்" ஈரோடு அவர்களுக்கு பூங்கா, திறந்தவெளி மற்றும் திறந்த வெளி கிணறு ஆகியவற்றை பராமரிப்புக்காக மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.இ1/0616/2020

**44. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

45. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண். 44ல் உள்ள பெரியார் நகர் புனல் டேங் வளாகத்தில் உள்ள மாநகராட்சி பூங்காவினை பெரியார் நகர் பகுதி மக்கள் பொழுது போக்கிற்க்காகவும், குழந்தைகள் விளையாடுமிடமாகவும் உபயோகித்து

வருகின்றனர், மேற்படி பூங்காவினை பராமரிக்க போதிய மாநகராட்சி பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பூங்கா பராமரிப்பின்றி பொழிவிழந்து காணப்படுகிறது. தற்போது மேற்படி பூங்காவினை " அறம் செய் அமைப்பு "ஈரோடு மூலமாக பராமரிப்பு செய்து கொடுப்பதற்கு இசைவு தெரிவித்து, பூங்கா பராமரிக்கவும் மற்றும் காவலாளி நியமித்து பூங்கா கண்காணித்து கொள்ளவும் அதற்காகும் செலவினத்தில் சிறு தொகையை மாநகராட்சி பங்களிப்பாக செய்து உதவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

பெரியார் நகர் மையப்பகுதியில் மேற்படி பூங்கா அமையப்பெற்றுள்ளதால், பூங்காவினை பராமரித்து பொதுமக்கள் பொழுதுபோக்கிற்கு அனுமதிக்க அவசியமாகிறது. எனவே, மேற்படி பூங்காவினை 01.04.2020 முதல் மூன்று வருடத்திற்கு நல்ல முறையில் பராமரித்து கொடுக்க " அறம் செய் அமைப்பு " ஈரோடு அவர்களுக்கு மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கவும், பூங்கா பராமரிப்பு மற்றும் காவலாளி கூலியாக மாதந்தோறும் ரூ. 10,000/– அவ்வமைப்பிற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1) அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.இ1/ 0691 /2020

**45. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

46. ஈரோடு மாநகராட்சி - பாதாள சாக்கடை திட்டம்- **P.S 1-** பெரியார் நகர் கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து உந்து செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஈரோடு மாநகராட்சி - பாதாள சாக்கடை திட்டம்- **P.S 1-** பெரியார் நகர் கழிவுநீரேற்று நிலையத்தில் உள்ள 100 H.P மோட்டாரின் Reflux valve பழுது ஏற்பட்டு மோட்டார் இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கழிவுநீரேற்றம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே ஈரோடு மாநகராட்சி - பாதாள சாக்கடை திட்டம்- **P.S 1-** பெரியார் நகர் கழிவுநீரேற்று நிலையத்தில் உள்ள 100 H.P மோட்டாரின் பழுதடைந்த Reflux valve சரி செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணியை சுகாதார அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய K.N. பிரசன்னா ஒப்பந்ததாரர், ஈரோடு , அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.92,355/-ஐ K.N. பிரசன்னா ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ4/ 1701 /2020)

**46 அ.கு அனுமதிக்கப்பட்டது / பதிவு செய்யப்பட்டது.**

47. ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புக்காக வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர இணைப்பு கட்டணங்கள் குறித்த உப விதிகள் மாமன்றத் தீர்மான எண்.1551 நாள்.

31.07.2009–ல் அனுமதிக்கப்பட்டு ஈரோடு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை அவர்களின் 09.03.2020ம் தேதிய கடிதத்தில் தற்போது பெறப்பட்டு வரும் மாதாந்திர கட்டணங்கள் (User Charges) மற்றும் வைப்புத் தொகை 10 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் இத்தலைப்பில் பெறப்படும் வருவாய் தற்போதைய பராமரிப்பு செலவுக்கும் மற்றும் கட்டுமானத்திற்கு பெறப்பட்டுள்ள கடன் தொகையினை திரும்ப செலுத்துவதற்கும் போதுமானதாக இல்லாத காரணத்தால் வீட்டு கழிவு நீர் குழாய் இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகள் ஆகியவற்றுக்கு தற்போது திருத்தப்பட்ட கட்டண விகிதத்தினை மாமன்றத் தீர்மான எண். 259 நாள். 10.03.2020 ல் பின்வருமாறு உயர்வு செய்து பரிந்துரைக்கப்பட்டதின்பேரில் உபவிதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட கட்டண விகிதங்கள் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 10% உயர்வு செய்யப்படும்.

| கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை விபரம் | | | | பாதாள சாக்கடை இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வீட்டிணைப்பு | | தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம் | | வீட்டிணைப்பு | | தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம் | |
| | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப் பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப் பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப் பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப் பட்ட விலை விகிதம் |
| கட்டிட பரப்பளவு 500 சதுரஅடிக்குட் பட்டது | 5000 | 7500 | 10000 | 15000 | 70 | 100 | 140 | 300 |
| கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுரஅடி முடிய | 7000 | 10000 | 21000 | 20000 | 100 | 140 | 300 | 420 |
| கட்டிட பரப்பளவு 1201 முதல் 2400 சதுரஅடி முடிய | 9000 | 12500 | 27000 | 25000 | 150 | 180 | 450 | 540 |
| கட்டிட பரப்பளவு 2401 சதுரஅடிக்கு மேல் | 15000 | 15000* | 75000 | 30000* | 200 | 220* | 1000 | 660* |
| * This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. Shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | | | |

மேற்படி தீர்மானத்தின் படி பாதாள சாக்கடை திட்ட வீட்டு கழிவுநீர் இணைப்பு வழங்குவதில் உள்ள நடைமுறையினை மாற்றி முதலில் மாநகராட்சி மூலம் இணைப்புகள் வழங்கப்படும் எனவும் பின்னர் அதற்கான முன் வைப்புத் தொகை (Deposit) மற்றும் இணைப்புக் கட்டணத்தினை (Connection Charges) சம்மந்தப்பட்ட வீடு, வணிகம் மற்றும் தொழிற்சாலை கட்டிடத்திற்கான சொத்துவரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் மேற்கண்ட திருத்திய கட்டண விகிதங்கள் குறித்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசணைகளை

தெரிவிக்குமாறு **20.03.2020–ல்** தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. பொதுமக்களிடமிருந்து **30** நாட்களுக்குள் எவ்வித ஆட்சேபணையும் வரப்பெறாததால், மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதங்களை மாமன்றம் உறுதி செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று திருத்தப்பட்ட பாதாள சாக்கடை திட்ட உபவிதிகளை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தவற்கும், அதற்கான கட்டணத்தினை மாவட்ட கருவூலத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணையும் வரப்பெறாததால் மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதங்களை மன்றம் உறுதி செய்யலாம்.
2. மேற்கண்ட விபரப்படி திருத்தப்பட்ட பாதாள சாக்கடை வீட்டு கழிவு நீர் குழாய் இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு குறித்த உபவிதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய அனுமதிக்கலாம்.
3. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கான கட்டணத்தினை மாவட்ட கருவூலகத்தில் செலுத்துவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ4/2569/2011)**

**47. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

48. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.4 சொட்டையம்பாளையம் மயானத்திற்கு அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் மற்றும் தடுப்பு சுவர் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.24.80 இலட்சத்திற்கு 31.10.2019 தேதியில் ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 25.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கான 1 சதவீத டேவணித் தொகையினை ஒப்பந்தாரர்கள் இருவரும் செலுத்தியுள்ளார்கள். எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கப்பட்டதின் விவரம் பின்வருமாறு

| | |
|---|---|
| திரு. டி. விஜயகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு. | 0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| திரு.ஏ.ராதாகிருஷ்ணன்,ஒப்பந்ததாரர், ஈரோடு | 1.48% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (-) 0.02% குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. டி. விஜயகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (-) 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. டி. விஜயகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/2076/2019

**48. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

49. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20 ன் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு ந.க.எண்: 2254/2019/அ3 நாள்: 07.01.2020-ம் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் /தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி வார்டு எண்: 29 காவேரி ரோடு மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு குழந்தைகள் சத்துணவு கட்டிடம் கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத்தொகை ரூ.15.00/- லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 11.02.2020 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை, அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| திருவாளர் டி எல்லோ சிட்டி பில்டர்ஸ் | -0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| திருவாளர் யுனைட்டட் இன்ஜினியர்ஸ் | 0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தரார்களும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-) 0.04% சதவீதம் குறைவானதாகவும், உள்ள திருவாளர் டி எல்லோ சிட்டி பில்டர்ஸ் நிறுவனத்தினர் அவர்கள் மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்: இ1/0125/2019 ன் படி 11.02.2020 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்தாரர் தனது 14.02.2020 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவான (-)0.04% சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர் டி எல்லோ சிட்டி பில்டர்ஸ் நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

01. வரப்பெற்ற இரண்டுஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டைவிட - 0.04% குறைவாக வழங்கியுள்ள திருவாளர் டி எல்லோ சிட்டி பில்டர்ஸ் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தைஏற்கலாம்.

**கோப்பு எண்.இ1/0125/2020-2**

**49. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

50. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட வார்டு எண்.46 முதல் 60 வரை உள்ள பகுதியில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் மூலம் உரமாக்கும் பணிக்கு மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகராட்சி ஆணையாளர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கிய தொடர்ந்து ரூ.315.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.46 கக்கன்ஜீ நகர் 2TPD MCC பணி ஆரம்பிக்கும் போது பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் மாற்று இடமாக முத்துசாமி காலனி குப்பைக்கிடங்கில் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடத்திலிருந்து குப்பைகளை அகற்றி அஸ்திவாரம் அமைக்கப்படும் போது அஸ்திவாரத்தின் ஆழம் 2.50மீட்டர் வரை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அஸ்திவாரம் முதல் தரை மட்டம் வரை அதிகளவு கிணற்று மண் நிரப்பி அதற்கு பின் தளம் அமைக்கப்பட்டது. மேலும் அஸ்திவாரத்தில் ஆங்காங்கே பாறை தென்பட்ட காரணத்தினால் பாறைகளை அகற்றி பின்பு மேற்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் இரண்டு உரக்கிடங்கிற்கும் பொதுவாக குப்பை அரைக்கும் இயந்திரம் (Shredding Machine) நிறுவதற்கு ஒரு புதிய கூடம் கூடுதலாக அமைக்குமாறு ஆணையாளர், மாநகராட்சி பொறியாளர் மறறும் செயற்பொறியாளர் ஆய்வின் போது அறிவுறுத்தினார்கள். இது போன்ற எதிர்பாராது மதிப்பீட்டில் இல்லாத புதிய இனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதால் மதிப்பீட்டில் சில இல்லாத அனுமதிக்கப்பட்ட அளவுகளை விட கூடுதலாகவும் சில இனங்கள் செய்ய இயலாத நிலையும் ஏற்பட்டது. மேலும் அனைத்து நுண்ணுயிர் மையங்களுக்கும் Air Turbo Ventilator, Fly catcher, RO system பொருத்தவும் அறிவுறுத்தப்பட்டது.

எனவே மேற்படி கட்டி முடிக்கப்பட்ட நுண்ணுயிர் மையங்களுக்கு (MCC Shed) அபிவிருத்திப் பணிகள் மற்றும் கூடுதல் இனங்கள் மேற்கொண்டு உரக்கூடத்தினை முழுமைப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.19.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேுண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/1836/2020.

**50. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

51. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.50 காந்திஜி சாலையில், ஈரோடு சீர்மிகு பொழிவு நகரம் (SMART CITY) திட்டத்தின் கீழ் பழைய பழுதடைந்த ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் பழைய குடியிருப்பை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய வணிக வளாகம் கட்டப்பட உள்ளது. எனவே அப்பகுதியில் காய்ந்து பட்டுப்போன நிலையில் சில மரங்களும், நல்ல நிலையில் சில மரங்களும் உள்ளதால், கீழ்காணும் மரங்களை அகற்றாமல் கட்டடிப்பணிகளை மேற்கொள்ள இயலாது. எனவே, தென்னை மரம் –7 எண்ணிக்கை, வேப்ப மரம் –7 எண்ணிக்கை, சைகை மரம் –1 எண்ணிக்கை, இலுப்பை மரம் –1 எண்ணிக்கை, நாவல்பழம் மரம் –1 எண்ணிக்கை, வாதனா மரம் –4 எண்ணிக்கை ஆகிய மரங்களை அகற்றுவதற்கு ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.இ1/620/2020

**51. அ.கு அனுமதிக்கப்பட்டது.**